In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No.163/2023 | Deposition of Witness: PW.25
Name: Nallakannan | Calling:
Father Name: | Religion:
Village: | Caste:
Taluk: | Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 26-08-2025.

**(Accused 1 produced through V.C. A2 died. A7 absent. Petition 355 BNSS filed and allowed. Other Accused are present.)**

சாட்சி காணொளி காட்சி வாயிலாக ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு மசா.25 முதல் விசாரணை செய்யப்பட்டார்.

தற்போது தேனிமாவட்டம், போடிநாயக்கனூரில் நீதித்துறை நடுவராக பணியாற்றி வருவதால் சாட்சி விசாரணை மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்ற காணொளி சாட்சி விதிகள் 2020ன்படி காணொளி காட்சி மூலம் பதிவு செய்யப்படுகிறது. காணொளி காட்சியின் நீதிமன்ற முனையில் மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களும், நீதிமன்ற ஊழியர்களும், ஒருங்கிணைப்பாளராக நீதிபதி உதவியாளர் திரு.R.சசிக்குமார் என்பவரும், மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.மகேந்திரன் அவர்களும், 1, 3 மற்றும் 5ம் எதிரிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு. P.கணேசன் அவர்களும், 7, 8, 9 எதிரிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு R.வெள்ளைச்சாமி அவர்களும், 4 மற்றும் 6ம் எதிரிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு A.ஜேம்ஸ் இளங்கோ அவர்களும் ஆஜரில் இருந்தார்கள். எதிர்முனையில் வழக்கில் சாட்சிமளிக்க வந்துள்ள திரு. அவர்கள் இருக்கிறார். இருதரப்பினரின் சம்மதத்தின் பேரில் சாட்சி விசாரணை காணொளி காட்சி மூலம் பதிவு செய்யப்படுகிறது. சாட்சியின் அடையாளத்தை எதிர்முனையிலுள்ள ஒருங்கிணைப்பாளர் சரி பார்த்து சாட்சியை அடையாளம் காட்டிய பிறகு காணொளி பதிவு தொடங்கப்படுகிறது.

**முதல் விசாரணை:–**

நான் தற்சமயம் தேனிமாவட்டம், போடிநாயக்கனூரில் நீதித்துறை நடுவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2023ம் வருடம் நீதித்துறை நடுவராக திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டையில் பணிபுரிந்து வந்தபோது திண்டுக்கல் நகர் வடக்கு காவல்நிலைய ஆய்வாளர் அவர்கள் மேற்படி நிலைய கு.எண்.447/2023 u/s 302 IPC வழக்கு சம்மந்தப்பட்ட எதிரிகள் அல்லாசிக் என்ற ஆசிக்முகமது, முகமது மீரான், கலில் அகமது, சதாம்உசேன், முகமது

இர்பான், சக்திமகேஷ்வர், முகமது அப்துல்லா, ஷேக்அப்துல்லா என்பவர்களை சாட்சிகள் தினேஷ்பாண்டியன், பாலசுப்ரமணி என்ற பாலாஜி ஆகியோர்கள் என்னிடம் எதிரிகளை அடையாளம் காட்ட திருச்சி மத்திய சிறையில் அடையாள அணிவகுப்பு நடத்த மாண்புமிகு தலைமை குற்றவியல் நடுவர் அவர்களிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அதன் அடிப்படையில் திண்டுக்கல் மாவட்ட தலைமை குற்றவியல் நடுவர் அவர்கள் உத்தரவு ஆர்ஓசி எண்.3020/2023/SHR dated 28.07.2023 உத்தரவு பிறப்பித்து என்னை அடையாள அணிவகுப்பு நடத்த உத்தரவிட்டு அந்த உத்தரவை 2.08.2023ம் தேதி நான் பெற்றுக்கொண்டு குற்றவியல் பல்வகை மனு எண்.5339/2023 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு திருச்சி மத்திய சிறைச்சாலையில் 3.8.2023ம் தேதி அடையாள அணிவகுப்பு நடத்த தேவையான முன்னேற்பாடுகளை செய்யுமாறு 2.08.2023ம் தேதியன்று கடிதம் அனுப்பப்பட்டது. எதிரிகள் அல்லாசிக் என்ற ஆசிக்முகமது, முகமது மீரான், கலீல் அகமது, சதாம்உசேன், முகமது இர்பான், சக்திமகேஷ்வரன், முகமது அப்துல்லா, ஷேக்அப்துல்லா ஆகியோர்களை அடையாளம் காட்ட மேற்படி சாட்சிகளுக்கு 3.8.2023 அன்று திருச்சி மத்திய சிறைக்கு அழைத்துவர திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையம் மூலம் 2.8.2023ம் தேதி அழைப்பாணை அனுப்பப்பட்டது. 03.08.2023ம் தேதியன்று நான் என் அலுவலக உதவியாளர் தினேஷ் என்பவருடன் மதியம் 1.15 மணிக்கு சென்றோம். திருச்சி மத்திய சிறைக்கு வெளியே நின்றிருந்த 2வது சாட்சி பாலசுப்ரமணி என்ற பாலாஜி என்பவர் மட்டும் அழைப்பாணையின் அடிப்படையில் வந்திருந்தவரை சார்பு செய்யப்பட்ட அழைப்பாணையைப் பெற்று உறுதி செய்துகொண்டேன். பின்னர் மேற்படி சாட்சி அடையாளம் சரிபார்க்க அவரது ஆதார் அடையாள அட்டையை வைத்து சரிபார்த்துக்கொண்டபிறகு அந்த ஆதார் அட்டையின் நகலை பெற்றுக்கொண்டேன். பின்னர் மேற்படி சாட்சி நான் அழைக்கும்வரை திருச்சி சிறையின் வெளியே வாயிலில் நிற்குமாறு கூறினேன். அதன்பிறகு திருச்சி மத்திய சிறையின் உள்ளே சென்று அங்கு அப்போது பணியிலிருந்த சிறைக்கண்காணிப்பாளரிடம் அடையாள

அணிவகுப்பு நடத்துவதற்கு ஏற்பாடு செய்வது குறித்து கேட்டறிந்துகொண்டேன். திருச்சி மத்திய சிறையில் ஆள் நடமாட்டம் இல்லாத அடையாள அணிவகுப்பு நடத்த தயார் செய்யப்பட்ட தனியறையில் அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டவேண்டிய சந்தேக எதிரிகள் என் முன்பாக ஆஜர்படுத்தப்பட்டவர்களை எனக்கு உதவியாக இருந்த திருச்சி மத்திய சிறை முதன்மை தலைமை காவலர் எஸ்.முரளிதரன் என்பவரிடம் மேற்படி சந்தேக எதிரியை நீதிமன்ற காவல் ஒப்படைப்பு வாரண்டில் உள்ள அங்க அடையாளங்களை வைத்து எதிரிகளை சரிபார்த்து அவர்கள்தான் அடையாள அணிவகுப்பு நடத்தப்படவேண்டியவர்கள் என்பதை உறுதி செய்து கொண்டேன். அவர்களிடம் நான் நிலக்கோட்டை நீதித்துறை நடுவர் என அறிமுகம் செய்து கொண்டு அடையாள அணிவகுப்பு சம்மந்தமான விதிமுறைகளை விளக்கி கூறினேன். பின்னர் அடையாள அணிவகுப்பில் பங்கேற்கக்கூடிய சிறையில் உள்ள மற்ற சிறைவாசிகளை என் முன்பாக ஆஜர் செய்தார்கள். என் முன்பாக ஆஜர் செய்யப்பட்ட நபர்களில் இருந்து அடையாளம் காட்டவேண்டிய எதிரிகளின் உயரம், பருமன், நிறம் ஒத்த 1:6 என்ற விகிதத்தில் தேர்ந்தெடுத்தேன். மேற்படி நபர்களை தேர்வுசெய்யப்பட்ட பின் அடையாளம் காட்டவேண்டிய எதிரி அல் ஆசிக் என்ற ஆசிக் முகமது மற்றும் எதிரி முகமது மீரான் என்பவர்களை மற்ற நபர்களுடன் சந்தேக எதிரிகளுடன் சேர்த்து 14 நபர்களை இடமிருந்து வலமாக நிற்கவைத்து அடையாள அணிவகுப்பு நடத்துவது சம்மந்தமாக நடைமுறைகளை எடுத்துரைத்து அவர்களை முதலில் இடமிருந்து வலமாக நிற்க பணித்தேன். அதன்படி எதிரிகளும் மற்ற சிறைவாசிகளும் இடமிருந்து வலமாக நின்றார்கள். மேற்படி இரண்டு எதிரிகளுடன் 12 சிறைவாசிகளை தேர்ந்தெடுத்து மொத்தம் 14 நபர்களை அடையாள அணிவகுப்பிற்காக இடமிருந்து வலமாக நிற்கும்படி கூறினேன். முதல் சுற்றில் எதிரி அல் ஆசிக் என்ற ஆசிக் முகமது 3 வது நபராகவும், முகமது மீரான் 10 நபராகவும் நின்றார்கள். பின்னர் நான் என் அலுவலக உதவியாளர் தினேஷ் என்பவரிடம் சிறைக்கு வெளியே நிற்கும் சாட்சி பாலசுப்ரமணி என்ற

பாலாஜியை சிறைக்குள்ளே அடையாள அணிவகுப்பு நடக்கும் இடத்திற்கு அனுப்பிவைக்குமாறு பணித்தேன். அதன்படி எனது அலுவலக உதவியாளர் சிறைக்கு வெளியே நின்ற மேற்படி சாட்சியை உள்ளே அனுப்பிவைத்தார். சாட்சி வந்தவுடன் அலுவலக உதவியாளரையும் காவலரையும் அறையை விட்டு வெளியே செல்லும்படி கூறினேன். அவர்கள் அறையை விட்டு வெளியே சென்றுவிட்டார்கள். சாட்சி பாலசுப்ரமணி என்ற பாலாஜியிடம் எதிரிகளை இதற்கு முன்னர் எங்கேயாவது பார்த்திருக்கிறீர்களா அவர்களை தெரியுமா எனக்கேட்டேன். அதற்கு சாட்சி சம்பவத்தின் போது பார்த்ததாகச் சொன்னார். மேற்படி சாட்சியிடம் வரிசையாக நின்றிருந்த நபர்களை காண்பித்து சம்பவத்தில் ஈடுபட்டவர்களை நன்றாக பார்த்து அடையாளம் காட்டும்படி கூறினேன். மேற்படி சாட்சி நின்று கொண்டிருந்த நபர்களை பார்வையிட்டு 3 வதாக நின்ற அல் ஆசிக் என்ற ஆசிக் முகமது என்பவரையும், 10 வதாக நின்றிருந்த முகமது மீரான் என்பவரையும் சரியாக அடையாளம் காட்டினார். பின்னர் சாட்சி பாலசுப்ரமணி என்ற பாலாஜியை வெளியே உள்ள அறையில் பாதுகாப்பாக இருக்கவைத்துவிட்டு அடையாள அணிவகுப்பில் பங்கேற்றவர்களை இடம் மற்றும் வரிசை மாறி நிற்கும்படியும் தேவைப்பட்டால் உடையை மாற்றிக்கொள்ளும்படியும் கூறினேன். அவர்கள் யாரும் உடையை மாற்றிக்கொள்ளவில்லை. இடம் மற்றும் வரிசை மாறி நின்றார்கள். 2 வது சுற்றில் அல் ஆசிக் என்ற ஆசிக் முகமது 4 வது நபராகவும், முகமது மீரான் 11 வது நபராகவும் வரிசையில் நின்றார்கள். பின்னர் வெளியே அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த மேற்படி சாட்சியை அலுவலக உதவியாளர் உதவியுடன் வரவழைத்து மீண்டும் வரிசையில் நிற்கும் நபர்களை பார்வையிட்டு சம்பவத்தில் ஈடுபட்டவர்களை அடையாளம் காட்டுமாறு கூறினேன். அச்சாட்சி வரிசையில் நிற்பவர்களை நன்றாக பார்வையிட்டு 2 வது முறையும் 4 வது நபராக நின்றிருந்த அல் ஆசிக் என்ற ஆசிக் முகமதுவையும் 11 வது நபராக நின்றிருந்த முகமது மீரானையும் அடையாளம் காட்டினார். பின்னர் சாட்சி பாலசுப்ரமணி என்ற பாலாஜியை வெளியே உள்ள அறையில் பாதுகாப்பாக

இருக்கவைத்துவிட்டு அடையாள அணிவகுப்பில் பங்கேற்றவர்களை இடம் மற்றும் வரிசை மாறி நிற்கும்படியும் தேவைப்பட்டால் உடையை மாற்றிக்கொள்ளும்படியும் கூறினேன். அவர்கள் யாரும் உடையை மாற்றிக்கொள்ளவில்லை. இடம் மற்றும் வரிசை மாறி நின்றார்கள். 3 வது சுற்றில் அல் ஆசிக் என்ற ஆசிக் முகமது 12 வது நபராகவும், முகமது மீரான் 3 வது நபராகவும் வரிசையில் நின்றார்கள். பின்னர் வெளியே அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த மேற்படி சாட்சியை அலுவலக உதவியாளர் உதவியுடன் வரவழைத்து மீண்டும் வரிசையில் நிற்கும் நபர்களை பார்வையிட்டு சம்பவத்தில் ஈடுபட்டவர்களை அடையாளம் காட்டுமாறு கூறினேன். அச்சாட்சி வரிசையில் நிற்பவர்களை நன்றாக பார்வையிட்டு 3 வது முறையும் 12 வது நபராக நின்றிருந்த அல் ஆசிக் என்ற ஆசிக் முகமதுவையும் 3 வது நபராக நின்றிருந்த முகமது மீரானையும் அடையாளம் காட்டினார். இவ்வாறு 3 சுற்றிலும் மேற்படி சாட்சி எதிரிகளை சரியாக அடையாளம் காட்டியதால் எனது அடையாள அணிவகுப்பை மேற்படி எதிரிகளைப்பொறுத்து இத்துடன் முடித்துக் கொண்டேன். எதிரிகளிடம் அடையாள அணிவகுப்பு நடத்தியது சம்மந்தமாக கேட்டபோது எதிரி அல் ஆசிக் என்ற ஆசிக் முகமது 21.7.2023 ம் தேதி தான் நீதிமன்றத்தில் ஆஜரானதாகவும், அப்போது மீடியாவில் தன்னை போட்டோ எடுத்ததாகவும் சொன்னார். அதனால் சாட்சி தன்னை அடையாளம் காட்டுவதாகவும் சொன்னார். மேலும் இதுகுறித்து எதிரி முகமது மீரானிடம் கேட்டபோது அவர் நீதிமன்றத்திற்குள் ஆஜரானபோது போட்டோ எடுத்ததாகவும், வீடியோ எடுத்ததாகவும் அதனால் சாட்சி தன்னை அடையாளம் காட்டுவதாகவும் கூறினார்.

அடுத்தபடியாக அடையாள அணிவகுப்பு நடத்தப்படவேண்டிய எதிரிகள் கலீல் முகமது, சதாம் உசேன் ஆகியோர்களின் உயரம், நிறம், பருமன் ஒத்த நபர்களாக ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட 12 சிறைவாசிகளும் இருந்ததால் அவர்களையே இந்த அடையாள அணிவகுப்பிற்கும் தேர்வு செய்துகொண்டேன்.

முதல் சுற்றில் எதிரி கலீல் அகமது 3 வது நபராகவும், சதாம் உசேன் 8 வது நபராகவும் நின்றார்கள். பின்னர் நான் என் அலுவலக உதவியாளர் தினேஷ் என்பவரிடம் அடையாள அணிவகுப்பு நடத்தும் அறைக்கு வெளியே உள்ள அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த சாட்சி பாலசுப்ரமணி என்ற பாலாஜியை அடையாள அணிவகுப்பு நடக்கும் இடத்திற்கு அனுப்பிவைக்குமாறு பணித்தேன். அதன்படி எனது அலுவலக உதவியாளர் மேற்படி சாட்சியை உள்ளே அனுப்பிவைத்தார். சாட்சி வந்தவுடன் அலுவலக உதவியாளரையும் காவலரையும் அறையை விட்டு வெளியே செல்லும்படி கூறினேன். அவர்கள் அறையை விட்டு வெளியே சென்றுவிட்டார்கள். சாட்சி பாலசுப்ரமணி என்ற பாலாஜியிடம் எதிரிகளை இதற்கு முன்னர் எங்கேயாவது பார்த்திருக்கிறீர்களா அவர்களை தெரியுமா எனக்கேட்டேன். அதற்கு சாட்சி சம்பவத்தின் போது பார்த்ததாகச் சொன்னார். மேற்படி சாட்சியிடம் வரிசையாக நின்றிருந்த நபர்களை காண்பித்து சம்பவத்தில் ஈடுபட்டவர்களை நன்றாக பார்த்து அடையாளம் காட்டும்படி கூறினேன். மேற்படி சாட்சி நின்று கொண்டிருந்த நபர்களை பார்வையிட்டு 3 வதாக நின்ற கலீல் அகமது என்பவரையும், அடுத்து 8 வதாக நின்றிருந்த சதாம் உசேன் என்பவரையும் சரியாக அடையாளம் காட்டினார். பின்னர் சாட்சி பாலசுப்ரமணி என்ற பாலாஜியை வெளியே உள்ள அறையில் பாதுகாப்பாக இருக்கவைத்துவிட்டு அடையாள அணிவகுப்பில் பங்கேற்றவர்களை இடம் மற்றும் வரிசை மாறி நிற்கும்படியும் தேவைப்பட்டால் உடையை மாற்றிக்கொள்ளும்படியும் கூறினேன். அவர்கள் யாரும் உடையை மாற்றிக்கொள்ளவில்லை. இடம் மற்றும் வரிசை மாறி நின்றார்கள். 2 வது சுற்றில் கலீல் அகமது 2 வது நபராகவும், சதாம் உசேன் 10 வது நபராகவும் வரிசையில் நின்றார்கள். பின்னர் வெளியே அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த மேற்படி சாட்சியை அலுவலக உதவியாளர் உதவியுடன் வரவழைத்து மீண்டும் வரிசையில் நிற்கும் நபர்களை பார்வையிட்டு சம்பவத்தில் ஈடுபட்டவர்களை அடையாளம் காட்டுமாறு கூறினேன். அச்சாட்சி வரிசையில் நிற்பவர்களை நன்றாக பார்வையிட்டு 2 வது முறையும் 2 வது நபராக நின்றிருந்த

கலீல் அகமதுவையும் 10 வது நபராக நின்றிருந்த சதாம் உசேனையும் அடையாளம் காட்டினார்.

பின்னர் சாட்சி பாலசுப்ரமணி என்ற பாலாஜியை வெளியே உள்ள அறையில் பாதுகாப்பாக இருக்கவைத்துவிட்டு அடையாள அணிவகுப்பில் பங்கேற்றவர்களை இடம் மற்றும் வரிசை மாறி நிற்கும்படியும் தேவைப்பட்டால் உடையை மாற்றிக்கொள்ளும்படியும் கூறினேன். அவர்கள் யாரும் உடையை மாற்றிக்கொள்ளவில்லை. இடம் மற்றும் வரிசை மாறி நின்றார்கள். 3 வது சுற்றில் கலீல் அகமது 3 வது நபராகவும், சதாம் உசேன் 13 வது நபராகவும் வரிசையில் நின்றார்கள். பின்னர் வெளியே அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த மேற்படி சாட்சியை அலுவலக உதவியாளர் உதவியுடன் வரவழைத்து மீண்டும் வரிசையில் நிற்கும் நபர்களை பார்வையிட்டு சம்பவத்தில் ஈடுபட்டவர்களை அடையாளம் காட்டுமாறு கூறினேன். அச்சாட்சி வரிசையில் நிற்பவர்களை நன்றாக பார்வையிட்டு 3 வது முறையும் 3 வது நபராக நின்றிருந்த கலீல் அகமதுவையும் 13 வது நபராக நின்றிருந்த சதாம் உசேனையும் அடையாளம் காட்டினார். இவ்வாறு 3 சுற்றிலும் மேற்படி சாட்சி எதிரிகளை சரியாக அடையாளம் காட்டியதால் எனது அடையாள அணிவகுப்பை மேற்படி எதிரிகளைப்பொறுத்து இத்துடன் முடித்துக்கொண்டேன். எதிரிகளிடம் அடையாள அணிவகுப்பு நடத்தியது சம்மந்தமாக கேட்டபோது எதிரி கலீல் அகமது மற்றும் சதாம் உசேன் இருவரும் ஒன்றுமில்லை எனச்சொல்லிவிட்டார்கள்.

அடுத்தபடியாக அடையாள அணிவகுப்பு நடத்தப்படவேண்டிய எதிரிகள் சக்தி மகேஷ்வர் மற்றும் முகமது இர்பான் ஆகியோர்களின் உயரம், நிறம், பருமன் ஒத்த நபர்களாக ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட 12 சிறைவாசிகளும் இருந்ததால் அவர்களையே இந்த அடையாள அணிவகுப்பிற்கும் தேர்வு செய்துகொண்டேன்.

முதல் சுற்றில் மகேஷ்வர் 2 வது நபராகவும், முகமது இர்பான் 10 வது நபராகவும் நின்றார்கள். பின்னர் நான் என் அலுவலக உதவியாளர் தினேஷ்

என்பவரிடம் அடையாள அணிவகுப்பு நடத்தும் அறைக்கு வெளியே உள்ள அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த சாட்சி பாலசுப்ரமணி என்ற பாலாஜியை அடையாள அணிவகுப்பு நடக்கும் இடத்திற்கு அனுப்பிவைக்குமாறு பணித்தேன். அதன்படி எனது அலுவலக உதவியாளர் மேற்படி சாட்சியை உள்ளே அனுப்பிவைத்தார். சாட்சி வந்தவுடன் அலுவலக உதவியாளரையும் காவலரையும் அறையை விட்டு வெளியே செல்லும்படி கூறினேன். அவர்கள் அறையை விட்டு வெளியே சென்றுவிட்டார்கள். சாட்சி பாலசுப்ரமணி என்ற பாலாஜியிடம் எதிரிகளை இதற்கு முன்னர் எங்கேயாவது பார்த்திருக்கிறீர்களா அவர்களை தெரியுமா எனக்கேட்டேன். அதற்கு சாட்சி சம்பவத்தின் போது பார்த்ததாகச் சொன்னார். மேற்படி சாட்சியிடம் வரிசையாக நின்றிருந்த நபர்களை காண்பித்து சம்பவத்தில் ஈடுபட்டவர்களை நன்றாக பார்த்து அடையாளம் காட்டும்படி கூறினேன். மேற்படி சாட்சி நின்று கொண்டிருந்த நபர்களை பார்வையிட்டு 2 வதாக நின்ற சக்தி மகேஷ்வர் என்பவரையும், அடுத்து 10 வதாக நின்றிருந்த முகமது இர்பான் என்பவரையும் சரியாக அடையாளம் காட்டினார். பின்னர் சாட்சி பாலசுப்ரமணி என்ற பாலாஜியை வெளியே உள்ள அறையில் பாதுகாப்பாக இருக்கவைத்துவிட்டு அடையாள அணிவகுப்பில் பங்கேற்றவர்களை இடம் மற்றும் வரிசை மாறி நிற்கும்படியும் தேவைப்பட்டால் உடையை மாற்றிக்கொள்ளும்படியும் கூறினேன். அவர்கள் யாரும் உடையை மாற்றிக்கொள்ளவில்லை. இடம் மற்றும் வரிசை மாறி நின்றார்கள். 2 வது சுற்றில் சக்தி மகேஷ்வர் 11 வது நபராகவும், முகமது இர்பான் 3 வது நபராகவும் வரிசையில் நின்றார்கள். பின்னர் வெளியே அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த மேற்படி சாட்சியை அலுவலக உதவியாளர் உதவியுடன் வரவழைத்து மீண்டும் வரிசையில் நிற்கும் நபர்களை பார்வையிட்டு சம்பவத்தில் ஈடுபட்டவர்களை அடையாளம் காட்டுமாறு கூறினேன். அச்சாட்சி வரிசையில் நிற்பவர்களை நன்றாக பார்வையிட்டு 2 வது முறையும் 11 வது நபராக நின்றிருந்த சக்தி மகேஷ்வரையும், 3 வது நபராக நின்றிருந்த முகமது இர்பானையும் அடையாளம் காட்டினார்.

பின்னர் சாட்சி பாலசுப்ரமணி என்ற பாலாஜியை வெளியே உள்ள அறையில் பாதுகாப்பாக இருக்கவைத்துவிட்டு அடையாள அணிவகுப்பில் பங்கேற்றவர்களை இடம் மற்றும் வரிசை மாறி நிற்கும்படியும் தேவைப்பட்டால் உடையை மாற்றிக்கொள்ளும்படியும் கூறினேன். அவர்கள் யாரும் உடையை மாற்றிக்கொள்ளவில்லை. இடம் மற்றும் வரிசை மாறி நின்றார்கள். 3 வது சுற்றில் சக்தி மகேஷ்வர் 2 வது நபராகவும், முகமது இர்பான் 11 வது நபராகவும் வரிசையில் நின்றார்கள். பின்னர் வெளியே அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த மேற்படி சாட்சியை அலுவலக உதவியாளர் உதவியுடன் வரவழைத்து மீண்டும் வரிசையில் நிற்கும் நபர்களை பார்வையிட்டு சம்பவத்தில் ஈடுபட்டவர்களை அடையாளம் காட்டுமாறு கூறினேன். அச்சாட்சி வரிசையில் நிற்பவர்களை நன்றாக பார்வையிட்டு 3 வது முறையும் 2 வது நபராக நின்றிருந்த சக்தி மகேஷ்வரையும் 11 வது நபராக நின்றிருந்த முகமது இர்பானையும் அடையாளம் காட்டினார். இவ்வாறு 3 சுற்றிலும் மேற்படி சாட்சி எதிரிகளை சரியாக அடையாளம் காட்டியதால் எனது அடையாள அணிவகுப்பை மேற்படி எதிரிகளைப்பொறுத்து இத்துடன் முடித்துக்கொண்டேன். எதிரிகளிடம் அடையாள அணிவகுப்பு நடத்தியது சம்மந்தமாக கேட்டபோது எதிரி சக்தி மகேஷ்வர் என்பவர் எல்லா செய்திகளிலும் வாட்ச்அப் வீடியோக்களிலும், நியுஸ் லைன் செய்தியிலும் தங்கள் போட்டோவை போட்டதாகவும், அதனால் சாட்சி அடையாளம் காட்டுவதாகக் கூறினார். மேலும் இதுபற்றி எதிரி முகமது இர்பான் ஏற்கனவே எல்லா செய்திகளிலும் தங்களின் போட்டோ வீடியோ போடப்பட்டதாகவும் அதனால் சாட்சி அடையாளம் காட்டுவதாகவும் கூறினார்.

அடுத்தபடியாக அடையாள அணிவகுப்பு நடத்தப்படவேண்டிய எதிரிகள் ஷேக் அப்துல்லா மற்றும் முகமது அப்துல்லா ஆகியோர்களின் உயரம், நிறம், பருமன் ஒத்த நபர்களாக ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட 12 சிறைவாசிகளும் இருந்ததால் அவர்களையே இந்த அடையாள அணிவகுப்பிற்கும் தேர்வு செய்துகொண்டேன்.

முதல் சுற்றில் ஷேக்அப்துல்லா 4 வது நபராகவும், முகமது அப்துல்லா 8 வது நபராகவும் நின்றார்கள். பின்னர் நான் என் அலுவலக உதவியாளர் தினேஷ் என்பவரிடம் அடையாள அணிவகுப்பு நடத்தும் அறைக்கு வெளியே உள்ள அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த சாட்சி பாலசுப்ரமணி என்ற பாலாஜியை அடையாள அணிவகுப்பு நடக்கும் இடத்திற்கு அனுப்பிவைக்குமாறு பணித்தேன். அதன்படி எனது அலுவலக உதவியாளர் மேற்படி சாட்சியை உள்ளே அனுப்பிவைத்தார். சாட்சி வந்தவுடன் அலுவலக உதவியாளரையும் காவலரையும் அறையை விட்டு வெளியே செல்லும்படி கூறினேன். அவர்கள் அறையை விட்டு வெளியே சென்றுவிட்டார்கள். சாட்சி பாலசுப்ரமணி என்ற பாலாஜியிடம் எதிரிகளை இதற்கு முன்னர் எங்கேயாவது பார்த்திருக்கிறீர்களா அவர்களை தெரியுமா எனக்கேட்டேன். அதற்கு சாட்சி சம்பவத்தின் போது பார்த்ததாகச் சொன்னார். மேற்படி சாட்சியிடம் வரிசையாக நின்றிருந்த நபர்களை காண்பித்து சம்பவத்தில் ஈடுபட்டவர்களை நன்றாக பார்த்து அடையாளம் காட்டும்படி கூறினேன். மேற்படி சாட்சி நின்று கொண்டிருந்த நபர்களை பார்வையிட்டு 4 வதாக நின்ற ஷேக் அப்துல்லா என்பவரையும், 8 வது நபராக நின்றிருந்த முகமது அப்துல்லா என்பவரையும் சரியாக அடையாளம் காட்டினார். பின்னர் சாட்சி பாலசுப்ரமணி என்ற பாலாஜியை வெளியே உள்ள அறையில் பாதுகாப்பாக இருக்கவைத்துவிட்டு அடையாள அணிவகுப்பில் பங்கேற்றவர்களை இடம் மற்றும் வரிசை மாறி நிற்கும்படியும் தேவைப்பட்டால் உடையை மாற்றிக்கொள்ளும்படியும் கூறினேன். அவர்கள் யாரும் உடையை மாற்றிக்கொள்ளவில்லை. இடம் மற்றும் வரிசை மாறி நின்றார்கள். 2 வது சுற்றில் ஷேக்அப்துல்லா 5 வது நபராகவும், முகமது அப்துல்லா 9 வது நபராகவும் வரிசையில் நின்றார்கள். பின்னர் வெளியே அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த மேற்படி சாட்சியை அலுவலக உதவியாளர் உதவியுடன் வரவழைத்து மீண்டும் வரிசையில் நிற்கும் நபர்களை பார்வையிட்டு சம்பவத்தில் ஈடுபட்டவர்களை அடையாளம் காட்டுமாறு கூறினேன். அச்சாட்சி வரிசையில் நிற்பவர்களை நன்றாக பார்வையிட்டு 2 வது முறையும் 5 வது நபராக நின்றிருந்த

ஷேக்அப்துல்லாவையும், 9 வது நபராக நின்றிருந்த முகமது அப்துல்லாவையும் அடையாளம் காட்டினார்.

பின்னர் சாட்சி பாலசுப்ரமணி என்ற பாலாஜியை வெளியே உள்ள அறையில் பாதுகாப்பாக இருக்கவைத்துவிட்டு அடையாள அணிவகுப்பில் பங்கேற்றவர்களை இடம் மற்றும் வரிசை மாறி நிற்கும்படியும் தேவைப்பட்டால் உடையை மாற்றிக்கொள்ளும்படியும் கூறினேன். அவர்கள் யாரும் உடையை மாற்றிக்கொள்ளவில்லை. இடம் மற்றும் வரிசை மாறி நின்றார்கள். 3 வது சுற்றில் ஷேக் அப்துல்லா 9 வது நபராகவும், முகமது அப்துல்லா 5 வது நபராகவும் வரிசையில் நின்றார்கள். பின்னர் வெளியே அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த மேற்படி சாட்சியை அலுவலக உதவியாளர் உதவியுடன் வரவழைத்து மீண்டும் வரிசையில் நிற்கும் நபர்களை பார்வையிட்டு சம்பவத்தில் ஈடுபட்டவர்களை அடையாளம் காட்டுமாறு கூறினேன். அச்சாட்சி வரிசையில் நிற்பவர்களை நன்றாக பார்வையிட்டு 3 வது முறையும் 9 வது நபராக நின்றிருந்த ஷேக்அப்துல்லாவையும் 5 வது நபராக நின்றிருந்த முகமது அப்துல்லாவையும் அடையாளம் காட்டினார். இவ்வாறு 3 சுற்றிலும் மேற்படி சாட்சி எதிரிகளை சரியாக அடையாளம் காட்டியதால் எனது அடையாள அணிவகுப்பை மேற்படி எதிரிகளைப்பொறுத்து இத்துடன் முடித்துக்கொண்டேன். எதிரிகளிடம் அடையாள அணிவகுப்பு நடத்தியது சம்மந்தமாக கேட்டபோது எதிரி முகமது அப்துல்லா என்பவர் பேப்பரலும், எல்லா செய்திகளிலும் தங்கள் போட்டோவை போட்டதாகவும், அதனால் சாட்சி அடையாளம் காட்டுவதாகக் கூறினார். மேலும் இதுபற்றி எதிரி ஷேக் அப்துல்லா ஏற்கனவே எங்கள் போட்டோ மீடியாக்கள் எல்லாவற்றிலும் வந்ததாகவும் அதனால் சாட்சி அடையாளம் காட்டுவதாகவும் கூறினார்.

இத்துடன் மாலை 4.25 மணிக்கு அடையாள அணிவகுப்பு முடிக்கப்பட்டது. அடையாள அணிவகுப்பு முடிக்கப்பட்ட பின்னர் சிறைவாசிகளையும் எதிரிகளையும் உரிய காவலர் வசம் ஒப்படைத்தேன். மேற்படி சாட்சி மேற்படி 8 எதிரிகளையும் மூன்று முறையும் சரியாக அடையாளம் காட்டினார். தலைமை

நீதித்துறை நடுவர் அவர்களிடம் காவல் ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் அதசாஆ.22. நீதித்துறை நடுவர் அவர்களிடம் உத்தரவு அதசாஆ.23. அடையாள அணிவகுப்பு அறிக்கை அதசாஆ.24. இது சம்மந்தமாக காவல்துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**1, 3 மற்றும் 5 ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–**

சாட்சி பாலசுப்ரமணி என்ற பாலாஜியை திருச்சி மத்திய சிறைச்சாளைக்கு யார் கூட்டிவந்தார்கள் என்றால் சார்பு ஆய்வாளர் அழைத்து வந்தார். அடையாள அணிவகுப்பு அறிக்கையில் அடையாள அணிவகுப்பில் பங்கேற்ற மற்ற சிறைவாசிகளின் வயது, நிறம், பருமன், உயரம் குறிப்பிட்டுச் சொல்லியுள்ளேனா என்றால் வயதை மட்டும் குறிப்பிட்டுச்சொல்லியுள்ளேன். குற்றம் சாட்டப்பட்டவர்கள் அணிந்திருந்த ஆடைகளின் விவரத்தையும் மற்ற சிறைவாசிகள் அணிந்திருந்த ஆடைகளின் விவரத்தையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த அறையில் ஜன்னல்கள் இருந்ததா என்பதையும் அடையாள அணிவகுப்பு நடத்தப்படும்போது அந்த ஜன்னல்கள் மூடப்பட்டதா என்பது குறித்தும் அடையாள அணிவகுப்பு அறிக்கையில் நான் குறிப்பிட்டுச் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எத்தனை சிறைவாசிகளை வைத்து 12 சிறைவாசிகளை தேர்வு செய்தேன் என்பதை குறிப்பிட்டுச்சொல்லவில்லை என்றால் சரிதான். ஒவ்வொரு முறையும் நான் அடையாள அணிவகுப்பு நடத்தும்போது எதிரிகளிடமும் மற்ற சிறைவாசிகளிடமும் ஆடைகளை மாற்றிக்கொள்ளும்படி வலியுறுத்தியிருக்க வேண்டும் என்றும் அவ்வாறு ஆடைகளை மாற்றிக்கொண்டு வரிசையில் நின்றால் அப்போது சாட்சி அடையாளம் காட்டுவதுதான் தெளிவான சாட்சியம் என்றால் நான் சிறைவாசிகளிடமும் எதிரிகளிடமும் ஒவ்வொரு முறை அடையாள அணிவகுப்பு நடத்தும்போது உடைகளை மாற்றிக்கொள்ளும்படி பணித்தேன். ஆனால் அவர்கள் மாற்றிக்கொள்ளமாட்டேன் எனச் சொல்லிவிட்டார்கள். சாட்சி பாலாஜிக்கு திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய சார்பு ஆய்வாளரால் வரவழைக்கப்பட்டபோது அவர் மேற்படி சாட்சியிடம்

எதிரிகளை ஏற்கனவே அடையாளம் காட்டுவதற்கு வாய்ப்புள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் மேற்படி சாட்சியிடம் சார்பு ஆய்வாளர் எதிரிகளை அடையாளம் காட்டினாரா என்ற கேள்வியை கேட்கவில்லை. நான் சட்டமுறைப்படி அணிவகுப்பு செய்யவில்லை என்றும், இது முழுமையான அடையாள அணிவகுப்பு இல்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே போலீசாரால் தயார் செய்யப்பட்ட சாட்சி பாலாஜி அடையாள அணிவகுப்பு எதிரிகளை அடையாளம் காட்டியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4 **மற்றும் 6 ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–**

1,3 மற்றும் 5 ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்கிறார்கள்.

**7, 8 மற்றும் 9 ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–**

1,3 மற்றும் 5 ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்கிறார்கள்.

மறுவிசாரணை – இல்லை

A
MUTHUSARATHA

Digitally signed by
A
MUTHUSARATHA
Date: 2025.08.26
15:48:01 +0530

Principal District Judge,
Dindigul.